| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 16.04.2026 | |
| STC No. 5/2024 | |
| சாட்சி :PW7 | |
| பெயர் : மருத்துவர். வெங்கடேஷ் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. மணிமாறன் | தொழில் : மருத்துவர் |
| கிராமம் : | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 34/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது மணப்பாறை அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.10.2023 அன்று காலை 07.40 மணியளவில் நான் மேற்படி மணப்பாறை அரசு தலைமை மருத்துவமனையில் பணியிலிருந்த போது 55 வயது மதிக்கதக்க சத்தியவாணி க/பெ. நடராஜன், மருங்காபுரி தாலுகா, திருச்சி மாவட்டம் என்பவரை அவரது கணவர் நடராஜன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை நான் விசாரித்த போது அவர் என்னிடம் அடையாளம் தெரிந்த 2 பெண்கள் மற்றும் ஒரு ஆண் 05.10.2023 அன்று இரவு 09.30 மணிக்கு தனது வீட்டில் வைத்து தன்னை கட்டையால் தாக்கியதாக கூறினார். அதனால் அவருக்கு வயிறு வலி ஏற்பட்டதாக என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு வெளிகாயங்கள் எதுவும் இல்லை. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. மருத்துவமனையில் அவரின் வயிற்று பகுதிக்கு அல்ட்ரா ஸ்கேன் செய்யப்பட்டது. அவர் மேற்படி மருத்துவமனையில் 06.10.2023 ம் தேதி முதல் 09.10.2023 ம் தேதிவரை உள்நோயாளியாக சிகிச்சை வழங்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். மேற்சொன்ன ஆயுதத்தால் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளாகும்போது வயிறு வலி ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. **என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2. ஒரு நபர் தவறி கீழே விழுந்தால் கூட மேற்படி காயங்கள் போன்று வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. வலி என்கிற விஷயம் கற்பனையாக கூட இருக்கலாம் என்றால் சரிதான். வயிற்று பகுதியில் எடுத்த ஸ்கேன் ரிப்போர்ட் நார்மலாக வந்தது என்றால் ஆமாம். விபத்து பதிவேட்டில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் 05.10.2023 தேதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அருகில் சைடு இன்சியல் எதுவும் பண்ணவில்லை என்றால் சரிதான்.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.